இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 320 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆனி 17 – புதன்கிழமை 01 ஜூலை 2026 – கோவை ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 320 : Thiruvalluvar Year - 2057 - Aani 17 - Wednesday 01 July 2026 - Kovai ★★ 8 Pages ₹ 5.00

### எதிர்க்கட்சிகளை மிரட்டி – ‘டேக் டைவர்ஷன்’ என அதிகாரத்தை வைத்து

# ஆட்டம் போடும் ரீல்ஸ் ஆட்சிக்கு, மக்களே பாடம் புகட்டுவர்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை!

**சென்னை, ஜூலை 1 –**

**எதிர்க்கட்சிகளை மிரட்டி – ‘டேக் டைவர்ஷன்’ என அதிகாரத்தை வைத்து ஆட்டம் போடும் ரீல்ஸ் ஆட்சிக்கு, மக்களே பாடம் புகட்டுவர் என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

இதுகுறித்து அவர் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

போதைப் பொருள் பயன்படுத்தியது போல், “Thug Life” Story போட்ட அமைச்சருக்கு எதிராகப் போராட்டம் செய்த தி.மு.க.வினர் கைது!



த.வெ.க. ஆட்சியை விமர்சிப்பதால், முன்னாள் அமைச்சர் சிவசங்கர் அவர்கள் மீது வழக்கு!

முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு அவர்களது வீட்டில் ரெய்டு!

இப்படி விமர்சிக்கும் எதிர்க்கட்சிகளை மிரட்டியும், ஊடகங்களுக்கு பதில் அளிக்காமலும் கட்டமைக்கப்பட்ட, தன் போலி பிம்பத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் முதலமைச்சரின் எண்ணம்

நீண்டகாலம் நீடிக்காது!

அதிகாரத்தை வைத்து ஆட்டம் போடுபவர்களின் அகங்காரம் அடங்கும்!

“டேக் டைவர்ஷன்… டேக் டைவர்ஷன்” என ஓடும் இந்த ரீல்ஸ் ஆட்சிக்கு, மக்களே பாடம் புகட்டுவார்கள்!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.




### போதைப் பொருள் : த.வெ.க. அமைச்சரை பதவி நீக்கக்கோரி ஆர்ப்பாட்டம்!

# தமிழ்நாடு முழுவதும் பல்லாயிரக்கணக்கான கழகத்தினர் கைது!

## பல்வேறு இடங்களில் போலீஸ் அராஜகம் – அனுமதி மறுப்பு! மாணவர் அணியினர் அலைஅலையாய் கைது!

**சென்னை, ஜூலை 1 –**

**போதைப் பொருள் பயன்படுத்திய த.வெ.க. அமைச்சரை பதவி நீக்கம் செய்யக்கோரி தமிழ்நாடு முழுவதும் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பல்லாயிரக்கணக்கான கழகத் தோழர்களும் மாணவர் அணியினரும் கைது செய்யப்பட்டனர்.**

பொது இடத்தில் போதைப் பொருள் பயன்படுத்திய அமைச்சர் சரத்குமாரை பதவி நீக்கம் செய்யக் கோரிய போராட்டத்திற்கு அனுமதி மறுத்த காவல்துறையினர், தி.மு.க. மாணவரணியினரை வலுக்கட்டாயமாக தடுத்துநிறுத்தி கைது செய்ததால் பதற்றம் ஏற்பட்டது.

சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெற்ற ஐ.பி.எல். போட்டியின் போது, மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் சரத்குமார் போதைப்பொருளை பயன்படுத்துவது போன்ற சர்ச்சைக்குரிய வீடியோ சமூக வலைதளங்களில் வைரலானது. இந்தச் செயலுக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள தி.மு.க. மாணவரணி, அமைச்சர் சரத்குமாரை உடனடியாகப் பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தி, நேற்று முன்தினம் மாநிலம் தழுவிய அளவில் ஆர்ப்பாட்டங்களை அறிவித்தது.



சென்னை, எழும்பூர் ராஜரத்தினம் மைதானம் அருகே மாணவரணி சார்பில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் அமைச்சர் – மாவட்டச் செயலாளர் மா.சுப்பிரமணியன், ப.தாயகம் கவி உள்ளிட்டோர் பங்கேற்று முழக்கங்களை எழுப்பினர்.




சென்னை, புரசைவாக்கம் பகுதியில் மாணவரணி சார்பில் மறியலில் ஈடுபட்ட முன்னாள் அமைச்சர் – மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு, மேயர் பிரியா, மாணவர் அணி செயலாளர் ஈரோடு வீரமணி, டாக்டர் நா.எழிலன், தமிழன் பிரசன்னா உள்ளிட்ட ஏராளமானோர் கைதானார்கள்.

இந்நிலையில், சென்னை எழும்பூர் ராஜரத்தினம் மைதானம் அருகே போராட்டத்தில் பங்கேற்பதற்காக முன்னாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் தி.மு.க. மாணவரணியினர் திரண்டனர். அப்போது, எழும்பூரில் பேரணியாக வந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தி.மு.க.வினரை காவல்துறையினர் வலுக்கட்டாயமாக தடுத்து நிறுத்தி கைது செய்ததால் பதற்றம் ஏற்பட்டது.

போதைப்பொருள் பயன்படுத்திய அமைச்சர் சரத்குமாரை பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தி சென்னை புரசைவாக்கத்தில் முன்னாள் அமைச்சர் சேகர்பாபு தலைமையில் தி.மு.க.வினர் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். மேயர் பிரியா, மாணவரணி செயலாளர் வீரமணி, தமிழன் பிரசன்னா உள்ளிட்டோரும் சாலையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்திற்கு அனுமதி மறுத்த காவல்துறையின் அராஜகத்தைக் கண்டித்தும், அமைச்சர் சரத்குமாரை பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தியும் அப்போது அவர்கள் முழக்கங்களை எழுப்பினர். இதனைத் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களை காவல்துறையினர் குண்டுக்கட்டாக தூக்கிச் சென்று கைது செய்ததால் பதற்றம் ஏற்பட்டது.

அமைச்சர் சரத்குமாரை பதவி நீக்கம் செய்யக் கோரிய தி.மு.க. மாணவரணியின் போராட்டத்திற்கு வேலூர், திருப்பத்தூர், காட்பாடி, நாமக்கல், சேலம், நெல்லை, திருவள்ளூர், கரூர், ஈரோடு, திருக்கோவிலூர், விழுப்புரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களிலும் காவல்துறையினர் அனுமதி மறுத்து அராஜகத்தில் ஈடுபட்டனர்.

**கனிமொழி கருணாநிதி எம்.பி. கண்டனம்!**

தி.மு.க. மாணவர் அணி ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதி மறுத்ததோடு, தி.மு.க.வினரை அராஜகமாக கைது

தொடர்ச்சி 2-ஆம் பக்கம்